1970 மார்ச் 23]

திரு. சு. துரைசாமி: ஒருசில தொழில்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் பனியன் உற்பத்தி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு சில தொழில்கள் என்று என் பதிலில் இல்லை. ஒருசில நிறுவனங்களுக்கு என்றுதான் கூறியிருக்கிறேன். தேவைப்பட்டவர்கள் மனுக்களைப் பார்த்து அந்தந்த நிறுவனங்களின் தேவைகளை கணக்கிலெடுத்துக்கொண்டு ஒரு வரம்பு வைத்து கொடுப்பதுதான் திட்டம்.

வாலாஜா வட்டத்தில் சர்க்கரை ஆலை

* 497 வினு—திரு. எம். அப்துல் கபூர் சாகிப்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில், இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட இருக்கும் சர்க்கரை ஆலையை வாலாஜா வட்டத்தில் அமைப்பது குறித்து அரசு கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

(இ) ஆம் எனில், வாலாஜா வட்டத்தில் எந்த இடத்தில் எப்போது ஆரம்பம் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம்.

வாலாஜா வட்டத்தில் சர்க்கரை ஆலை நிறுவுவதாக உத்தேசமில்லை. புதிய சர்க்கரை ஆலைகள் இரண்டினையும் குடியாத்தம் வட்டத்தைச் சார்ந்த பிரம்மாபுரத்திலும், திருப்பத்தூர் வட்டத்தைச் சார்ந்த ஆம்பலூரிலும் அமைப்பதாக அரசு தீர்மானித்திருக்கிறது.

திரு. நா. வீராசாமி: அங்கு சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கான வேண்டுகோள் வந்தது, ஆனுல் ஆரம்பிக்கிற உத்தேசம் இல்லை என்று சொன்னுர்கள். வாலாஜா, செய்யாறு, ஆரணி இம் மூன்று தாலுகாக்களில் ஒரு சர்க்கரை ஆலை கூடக் கிடையாது. ஆகவே, அரசுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலையை அனுமதிப்பதற்கு இங்கு இப்போது திட்டம் இல்லை என்று சொன்னுலும் தனியார் துறையில் ஆரம்பிப்பதற்கு வேண்டுகோள் போட்டிருந்தார்கள், அதையாவது அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லா மாவட்டங்களைக் காட்டிலும் வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமான சலுகைகள் காட்டி வருகிருேம். ஏற்கனவே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. மேலும் நாம் தொடங்க இருக்கிற இரண்டு ஆலைகளை அதே வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் தொடங்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிருேம். இன்னொரு ஆலை போளூர் வட்டத்தில் தனியார் துறையில் ஆரம்பிக்க வேண்டுமென்று முயற்சி எடுத்திருக்கிருர்கள். அதற்கும் சிபாரிசு செய்திருக்கிருேம். இவ்வளவெல்லாம் கொடுத்தும் வட ஆர்க்காடு உறுப்பினர்களுக்கு திருப்தி ஏற்படவில்லையே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது.